**செ.வெ.எண்:16/ஜூன்** **நாள்:09.06.2016**

# இராமநாதபுரம் மாவட்டம்

## மண்டபம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்களிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டம் பேரூராட்சியில் (09.06.2016) மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மண்டபம் பேரூராட்சியின் மூலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கழிவு மற்றும் குப்பை பொருட்களிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பேரூராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள வீடுகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என இனம் பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகள் வளம் மீட்பு பூங்காவில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு மாட்டுச் சாணத்துடன் கலந்து நிரப்பப்படுகிறது. குப்பைகளில் உள்ள கிருமிகள் மற்றும் நச்சுத்தன்மைகளை அழிக்க மைக்ரோ பியான் மருந்து தெளிக்கப்பட்டு (40 முதல் 60 நாட்களுக்குள்) குப்பைகள் அனைத்தும் மட்கி இயற்கை உரமாக தயாரிக்கப்படுகிறது. வளமீட்பு பூங்காவில் நாள் ஒன்றிற்கு 60 கிலோ வரையிலும் மாதத்திற்கு சுமார் 1500 கிலோ வரை இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது. இதுவரை ஏறத்தாழ ரூ.22,500/- மதிப்பில் சுமார் 7500 கிலோ இயற்கை உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, மண் புழு உரம் தயாரிப்பு மற்றும் விற்பனையும் , பிளாஸ்டிக் மறுசுழற்சி மற்றும் பிளாஸ்டிக் உபயோகத்தினை குறைப்பதற்கான விழிப்புணர்வும் பொதுமக்களிடையே ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கழிவுப் பொருட்களிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகளுக்காக திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.22.54 இலட்சம் மதிப்பில் உலர்களம் மற்றும் உலர்களம் கூரை அமைப்பதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுதவிர, ரூ.3.15 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும், 6.66 இலட்சம் மதிப்பில் தள்ளுவண்டிகள் வாங்குவதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு பொருட்களிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகளையும் ரூ.22.54 இலட்சம் மதிப்பில் உலர்களம் மற்றும் உலர்களம் கூரை அமைப்பதற்கான கட்டுமான பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் மண்டபம் பேரூராட்சியில் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.53.13 மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் மொத்தம் 21 பசுமை வீடுகளின் கட்டுமானப் பணிகளையும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.6.72 மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொத்தம் 84 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டும் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (சிவகங்கை மண்டலம்) திரு.பாலமுருகன், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.மாலதி, இளநிலை பொறியாளர் திருமதி.பாண்டிஸ்வரி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**